ஜாலான் ரஹ்மாட்டில் தற்காலிக இந்து ஆலய கட்டமைப்பு:

# அனுமதி இல்லை

## கோலாலம்பூர் மாநகர் மன்றம் அறிக்கை

கோலாலம்பூர், ஏப். 12-

பூசாட் பண்டார் ஜாலான் ஈப்போ அருகே, ஜாலான் ரஹ்மாட் எனுமிடத்தில் இந்து ஆலயத்தின் ஒரு தற்காலிக கட்டமைப்பு டிபிகேஎல் எனப்படும் கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அனுமதியின்றி எழுப்பப்பட்டிருக்கிறது என்று டிபிகேஎல் கூறியிருக்கிறது.

அந்த நிலம் தனியாருக்குச் சொந்தமானது என்றாலும் அந்த இடத்தில் அந்தக் கட்டமைப்பு எழுப்பப்பட்டது தொடர்பில் சில அமலாக்க நோட்டீசுகள் அனுப்பப்பட்டிருந்தன. கட்டுமானப் பணியை நிறுத்துவதும் அதில் அடங்கும் என்று டிபிகேஎல் கூறியது.

இதற்கிடையே, அந்தக் கட்டமைப்பை நிர்மாணிக்கும் பணிகள் நிறுத்தப்பட்டது சோதனை நடவடிக்கையில் தெரிய வந்ததாகவும் அது குறிப்பிட்டது.

கடந்த ஏப்ரல் 7ஆம் தேதி நில உரிமையாளருடன் டிபிகேஎல் நடத்திய பேச்சுவார்த்தைக்குப் பிறகு ஒரு சிற்றாலயத்தின் தெய்வச் சிலைகளை தற்காலிகமாக அங்கு வைக்கத்தான் அந்த கட்டமைப்பு எழுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பகுதியில் வர்த்தக கட்டட வளாகம் எழுப்பப்படவிருப்பதால் ஒரு சிற்றாலயத்தின் தெய்வச் சிலைகளை தற்காலிகமாக அங்கு வைக்க அந்தக் கட்டமைப்பு வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது என்று டிபிகேஎல் கூறியது.

அதுமட்டுமன்றி, நில

பக்கம் 13

## முதல் பக்கத் தொடர்ச்சி

### ஜாலான் ரஹ்மாட்டில்...

உரிமையாளரின் தனிப்பட்ட பயனீட்டுக்காகத்தான் அந்த தற்காலிக கட்டமைப்பு அமைந்தது. பொது மக்களுக்காக அல்ல என்பதும் தெரிய வந்ததாக டிபிகேஎல் அறிக்கை கூறியது.

இதற்கிடையே, மத போதகர்கள் பிரிட்டாஸ் வோங், ரிதுவான் தி அப்துல்லா உள்ளிட்ட 30க்கும் மேற்பட்டோர் அந்த ஆலயக் கட்டமைப்புக்கு முன் நேற்று அமைதி மறியலில் ஈடுபட்டனர்.

அமைச்சர் அமித்ஷாவை அ.தி.மு.க. பொதுச்செயலாளர் இ.பி.எஸ். சந்தித்துப் பேசினார். இதனைத் தொடர்ந்து அமித்ஷா, இ.பி.எஸ்., அண்ணாமலை ஆகியோர் கூட்டாக நிருபர்களைச் சந்தித்தனர். அப்போது அமித்ஷா பேசியதாவது:

அனைவருக்கும் பங்குனி உத்திர வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பா.ஜ.க. தலைவர்களும் அ.தி.மு.க. தலைவர்களும் ஒன்றாக இணைந்து கூட்டணியை உருவாக்கி உள்ளார்கள். அடுத்து வரும் தேர்தலை தே.ஜ. கூட்டணியுடன் இணைந்து சந்திப்போம்.

இந்தத் தேர்தலை தேசிய அளவில் பிரதமர் மோடி தலைமையிலும் தமிழகத்தில் இ.பி.எஸ். தலைமையிலும் சந்திப்போம். 1998ஆம் ஆண்டு முதல் பா.ஜ.க.வும் அ.தி.மு.க.வும் தொடர்ந்து கூட்டணி அமைத்து வருகின்றன. இது இயல்பான கூட்டணி. ஜெயலலிதா காலம் முதல் கூட்டணி அமைக்கப்பட்டு உள்ளது. தமிழகத்தில் 30 இடங்களில் தே.ஜ. கூட்டணி வெற்றி பெற்றுள்ளது. வரும் தேர்தலில் தே.ஜ. கூட்டணி ஆட்சி அமைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது என்று அவர் கூறினார்.